

**வாரந்தோறும் ஒரு தீபம்!**

**உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. (சங்கீதம்119:105)**

**(வாரம் முழுவதும், புத்தொளி சுடரில் நடத்தும் தெய்வீக செய்திகள்!)**

**(வியாழன்தோறும்)**

| 25.01.2018 | **04. நன்மை ஒன்றே பேசும், நல்ல மரம்!** |
|---|---|



**பி**றரைத் தீமை பேசக்கூடாது என்பது மாத்திரம் சுவிசேஷம் இல்லை! பிறரின் நன்மை ஒன்றே பேசவேண்டும் என்பதில்தான் இயேசுவின் நற்செய்தி அடங்கியிருக்கிறது. சொந்தப் பிள்ளைகளைக் கூட அநாகரீக வார்த்தையால் திட்டுவதும், சொந்த சகோதரனை “மூடன்” என்று ஆத்திரமாய் பேசுவதுமான திருக்கு நெஞ்சம் கொண்டதுதான் **நம் இருதயம்!**

“Make the tree Good - மரம் நல்லதாய் மாறினால்” நல்ல கனி தரும் (நல்லவை பேசும்) (மத்தேயு.12:33). பரிசுத்த ஆவியின் துணையோடு, **தன் வேரில் (இருதயத்தில்) கோடாரி வைத்தவன்** பெறுவதே நல்ல மரம்! அவனையே “நல்ல மனுஷன்” என இயேசு கூறினார்(வச.25).

இதுபோன்று, ‘ஆணி வேரில்’ கோடாரி வைத்து மரத்தை சாய்க்காமல், ‘பெரிய விரியன் பாம்பை’ குட்டி விரியன்பாம்பாக மாற்றினால், தொடர்ந்து பொல்லாதவர்களாகவே இருப்பீர்களென்றும், “நலமானவைகளை உங்களால் எப்படிப் பேச முடியும்?” எனவும் இயேசு எச்சரித்தார்! (மத்.12:34).

இவ்வாறு, யாதொருவன் தன் ‘இருதயம் நொறுங்கி’ ஆண்டவரிடம் வருகிறானோ, அவனையே அவர் காயம் கட்டி சுகமாக்குகிறார்! இருதயத்தை கனிதரும் அல்லது நல்லவைகளையே பேசும் ‘நல்ல மனுஷனாய்’ மாற்றுகிறார் (சங்.147:3).

**– ரத்னம்**